# தேவன் தீர்க்கதரிசிகளை தம்முடைய ராஜ்யத்திற்கென்று பயன்படுத்துதல்
# GOD'S USE OF PROPHETS FOR HIS SOVEREIGNTY

**அறிமுகம்**

இந்தப் பாடத்தின் சரித்திர பின்னணியாக லேவிய ஆசாரியத்துவ சகாப்தம் அமைந்து உள்ளது. மோசே முதற்கொண்டு மேசியா வரைக்கும் இந்தப் பூமியின் மீது வாழ்ந்த மக்களுடைய வாழ்க்கையில்,தேவன் தம்முடைய நித்திய ராஜ்யத்தின் ஒரு பகுதியை எப்படி நிலைநிறுத்தினார் என்பதை புரியவைப்பதே இந்தப் புத்தகத்தின் பரந்த நோக்கமாகும். நான்காம் பாடம் முதல் ஒன்பதாம் பாடம் வரை அமைந்துள்ள பாடங்களின் தலைப்புகள் இப்பாடத்தின் ஒட்டு **மொத்த நோக்கத்தோடு** தொடர்பு உடையவையாகும்; அப்படியிருப்பினும், தேவன் தம்முடைய பரலோக குடும்பத்தில் பிள்ளைகளை உருவாக்குவதற்கு அவர் பயன்படுத்தின ஒவ்வொரு விசேஷித்த காரியமும் அந்தந்த பாடத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. **அவருடைய ராஜ்ய உரிமையை பாதுகாப்பதற்கு தீர்க்கதரிசிகளை எப்படி பயன்படுத்திக் கொண்டார் என்பதை காண்பிப்பது இப்பாடத்தின் நோக்கம்;** "சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி" ஒரு ராஜா வேண்டுமென்ற இஸ்ரவேலருடைய வேண்டுகோளுக்கு இணங்க, அவர் ராஜாவை ஏற்படுத்திய போதிலும், இஸ்ரவேலருடைய ராஜாக்கள் உட்பட பூமியில் உள்ள எல்லா ஆட்சியாளர்களுக்கும் அவரே ராஜாவாய் இருக்கின்றார். *1 சாமுவேல் 8:5.* நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் மேலான கர்த்தாதி கர்த்தாவாக அவர் இருக்கின்றார். *1 கொரி. 15:27; 1 தீமோ. 1:17;6:13-16.*

மோசேயைப் போன்றவராக தேவன் எழுப்பின தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவே; லேவிய ஆசாரியத்துவ காலத்துக்கு உட்பட்டு வாழ்ந்து மரித்தவர் இயேசு. அவர் செய்த வேலையும், தெரிவித்த செய்தியும், தேவன் மோசேக்கும், இஸ்ரவேலருக்கும் கொடுத்திருந்த நியாயப்பிரமாணத்தை **அழிக்கும்படியாக** இருக்கவில்லை. மாறாக, கிறிஸ்தவர்களுக்குள் அதை





**நிறைவேற்றும்படியாகவே** அமைந்திருந்தன. தயவு கூர்ந்து வாசிக்கவும் *மத்தேயு 5:17-20; ரோமர் 8:3,4.* இஸ்ரவேலருடைய மனங்களிலும், இருதயங்களிலும் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்படுத்தி நிலைநிறுத்துவதற் கென்று மோசேயையும், இயேசு கிறிஸ்துவையும் தீர்க்கதரிசிகளாக அவர் பயன்படுத்திக்கொண்டார். தேவனுடைய சித்தத்திற்கு தங்களை அர்ப்பணிக்கும்படி மக்களை ஊக்குவிப்பதே இந்த தீர்க்கதரிசிகளின் வேலையாயிருந்தது. அறியாமையினாலே இஸ்ரவேலர் செய்திருந்த பாவம், தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் தேவன் முன்னறிவித்தவைகளை நிறைவேற்றியது என்று பேதுரு அறிவித்தான். *அப்போஸ்தலர் 3:17,18.* அதன் பின்னர், நேபோ மலையின் மீது மோசே மரணமடைவதற்கு முன்பாக கிறிஸ்துவைக் குறித்து அவன் சொல்லியிருந்த தீர்க்கதரிசனத்தை இவன் நினைவுபடுத்தினான். *உபாகமம் 18:15,16; 34:5-8.*

*"மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச்சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளா தவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப் படுவான் என்றான். சாமுவேல் முதற்கொண்டு, எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ, அத்தனைபேரும் இந்த நாட்களை முன்னறிவித்தார்கள். நீங்கள் அந்தத் தீர்க்கதரிசி களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்க ளோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக் கிறீர்கள். அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்கு களிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான். அப். 3:22-26.*

மோசே இயேசுகிறிஸ்துவைப் பற்றி இஸ்ரவேலருக்கு தீர்க்கதரிசனமாக அறிவித்திருந்தான். தேவன் யோவேல் தீர்க்கதரிசிக்கு தெரியப்படுத்தியிருந்த செய்தியை இயேசுவும் தீர்க்கதரிசனமாக அறிவித்தார். அந்தச் செய்தியானது, கடைசி நாட்களில் தேவன் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு செய்ய இருந்த அற்புதமான வேலையை பற்றியதாக இருந்தது. *யோவேல் 2:28; யோவான் 7:37-39; அப்போஸ்தலர் 2:17.* தேவன் தமது மக்களுக்குள் தாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு தமது ராஜ்யத்தை நிலைநிறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். “தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்”, “ஆவிக்குரிய இஸ்ரவேலருமானவர்களை” பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு சுத்திகரிப்பதற்கு வழியை ஆயத்தம்பண்ணும்படியாகவே அவர் தமது குமாரனை மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரிடம் அனுப்பினார். *1பேதுரு 1:1-2; யாக்கோபு 1:2.* இதைக் குறித்து இனிவரும் பாடம் ஒன்றில் படிப்போம்.

லேவி ஆசாரியத்துவ சகாப்தத்தில் இஸ்ரவேலரிடம் பேசும்படி தேவன் பயன்படுத்தின முதல் தீர்க்கதரிசி மோசே, கடைசி தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்து. மீதியான் தேசத்தில் இருந்த “ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலிருந்து” தமக்கு தீர்க்கதரிசியாய் இருக்கும் படிக்கு மோசேயை அழைத்தார். இஸ்ரவேலருக்கு தெரிவிக்க விரும்பிய செய்தியை மோசேயிடம் ஒப்படைத்தார். இஸ்ரவேலர் பற்றி தேவன் தெரிவிக்கும் விவரங்களை நாம் எப்போது படித்தாலும் இந்த உண்மையை மனதிற்கொண்டே படிக்க வேண்டும். தேவன் தீர்க்கதரிசிகளைக் கொண்டு மக்களிடம் பேசினார். தீர்க்கதரிசியானவன் மக்களில் ஒருவனாக இருந்ததினால், அவன் தெரிவித்த செய்தி அவனுக்கும் உரியதாக இருந்தது. ஒரு தீர்க்கதரிசி பேசுகிற சூழ்நிலையை பற்றி தேவன் தெரிவிப்பதை நாம் கேட்கவேண்டியது அவசியம். இஸ்ரவேலருடைய உண்மை நிலையை குறித்து அவர் அவர்களிடம் பேசுவதை நாம் கேட்கலாம்.





வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், ராஜாக்கள் மற்றும் தங்களுடைய பிரசங்கியார்களாலும் கூட சொல்லப்படும் வார்த்தைகளில் வசியப்படுத்தப் படுவதால், தேவன் பேசுவதைக் கேட்க பெரும்பாலும் மறந்துவிடுகிறார்கள். இஸ்ரவேலர், மோசேயை நோக்கி: “நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம்” என்று சொன்னபோது அவர்கள் எந்த மனநிலைமையில் இருந்தார்களோ, அதே மன நிலைமையில் நாமும் இருக்கக்கூடும். *யாத்திராகமம் 20:19.* தேவன் பேசுவதை கேட்பதில் மக்கள் காண்பிக்கும் ஆர்வத்தை விட, அவருக்காக பேசுகிறோம் என்று சொல்பவர் வார்த்தைகளை கேட்பதில் தான் அதிக ஆர்வம் காண்பிக்கிறார்கள், நிலைமை இப்படி ஆனது ஏன்?

ஆபிரகாமுடைய தேவனும், கிறிஸ்தவர்களுடைய தேவனும் ஒருவர்தான். அவரே நம்முடைய பிதாவுமாக இருக்கின்றார். அவர் நம்மிடம் பேச விரும்புவதால், நாம் அவர் பேசுவதை கவனிக்க கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வோம் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றது. நமது நம்பிக்கை தேவனை அறிந்துகொள்வதை அடிப்படையாகக் கொண்டே இருக்க வேண்டும்; ஏனெனில், இதுவே நித்திய ஜீவனுக்கு திறவுகோலாக அமைந்துள்ளது. *யோவான் 17:3; 1 கொரி. 1:21.* வேறொரு மனிதர் சொல்வதை கவனிப்பதினால் மட்டுமே நாம் அவரை அறிந்துகொள்ள முடியாது. அவர் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு குறிப்பிட்ட மக்களை வழிநடத்தி எழுதி வைத்த புத்தகத்தின் மூலமாகவே நம்மிடம் பேசுகின்றார். கிறிஸ்தவர்கள் தங்கள் பிரயோஜனத்திற்கென்று தாங்களே வேதத்தை வாசிக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்துவதே இந்தப் பாடத்தொகுப்பின் ஒட்டுமொத்த நோக்கம் ஆகும். வாசிப்பதற்கும், சிந்திப்பதற்கும், நம்புவதற்கும், புரிந்துகொண்டதை விசுவாசிக்கும்படி தீர்மானிப்பதற்கும் நமக்கு சக்தி இருக்கின்றது. தேவன் தமது தீர்க்கதரிசிகளை பயன்படுத்தி

இஸ்ரவேலரிடம் பேசுவதை கவனிப்பதன் மூலம் அவரைப் பற்றி அதிகமாக நாம் கற்றுக்கொள்ள முடியும்.

தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்குள் தங்களுடைய "விசுவாசக் கதவினை" திறந்த நிலையில் வைத்துக்கொள்ளாத மக்களை பிசாசானவன் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளுகிறான். சாத்தானானவன் தேவனுடைய ராஜ்யத்திற்குப் போகும் வழியின் கதவினை அடைத்துவிட்டு பல்வேறுபட்ட மதங்களை உருவாக்கிவிட்டான். இஸ்ரவேலர்கள் தங்கள் "விசுவாசக் கதவினை" மூடிவைத்திருந்ததால் விக்கிரக ஆராதனை உருவானது. விக்கிரக ஆராதனை அவர்களது தீராத நோயாக இருந்து வந்தது. *யாத்திராகமம் 32:22,23.* லேவிய ஆசாரியத்துவ முறைமை மூலமாக அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவதற்கு வழி உண்டானது. அவர்கள் விக்கிரக ஆராதனைக்கு திரும்பிய போது, அவர்களோடும் அவர்கள் தலைவரோடும் "தொடர்புகொள்ளும்படி" தீர்க்கதரிசிகளை அவர் பயன்படுத்திக்கொண்டார். சில தீர்க்கதரிசிகளுக்கு ஆசாரியரை விட அதிகமான உரிமையை அவர் கொடுத்திருந்தார். தேவன் நிமித்தமாக மோசே மக்களிடம் அடிக்கடி பேசினான். அதுமட்டுமல்ல, மக்கள் சார்பாக தேவனிடம் அவனே வேண்டுதலும் செய்தான். பார்க்கவும் *யாத்திராகமம் 32:15-35.*

**பாடம்**

சாமுவேல் தன் சிறுவயது முதற்கொண்டே தேவனுடைய தீர்க்கதரிசியாக பணியாற்றி வந்தான். இவனே கடைசி நியாயாதிபதியாகவும் இருந்தான். *1 சாமுவேல் 7:5,6.* "இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம்" வருஷத்தில் சாலொமோன் தேவனுடைய ராஜ்யத்தின் மேல் ராஜாவாகி கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத்தொடங்கினான். *1 இராஜாக்கள் 6:1; 1 நாளா. 28:5.* வனாந்தரத்திலே இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணின 40 வருடங்களையும் சவுலும், தாவீதும் ராஜாவாயிருந்த 80 வருடங்களையும் கழித்துவிட்டு, யோசுவா இஸ்ரவேல் மக்களை யோர்தான் ஆற்றைக் கடக்கப்பண்ணின காலம் முதல் சாமுவேல் தீர்க்கதரிசியாக





பணியாற்றிய காலம் வரையிலும் கணக்கிட்டுப் பார்த்தால் தோராயமாக 300 வருடங்கள் இருக்கும். இந்தக் கால கட்டத்தில் அவரைப் பற்றியும், இஸ்ரவேலரைப் பற்றியும் வேதத்திலுள்ள சரித்திரத்தை நாம் தெரிந்துகொள்வதின் மூலமாக தேவனைப் பற்றி அதிகம் கற்றுக்கொள்ள முடியும். சாத்தான் எதிராளியாக இருக்கிறான் என்ற விஷயத்தை மனதிற்கொண்டே யோசுவா, நியாயாதிபதிகள் புத்தகங்களை வாசிக்க வேண்டும். இஸ்ரவேல் தேசத்தின் இந்த முதல் 300 ஆண்டுகளில் அவர்களுக்கான வாழ்க்கையின் மாதிரியை நம்மால் பார்க்க முடிகிறது. தேவன் யோசுவாவுக்கும், நியாயாதிபதிகளுக்கும் செய்து வந்தது போலவே இவர்களுக்கும் உதவி செய்து வழிநடத்தினார். அவருடைய உதவியினால் அவர்கள் பாதுகாப்பான வீடுகளையும், வயல்களையும், தன்னாட்சி உடைய தேசத்தையும் பெற்றுக்கொண்டார்கள் அவர்களுக்கு ஆவிக்குரிய வழிநடத்துதலையும், தேசிய வழிநடத்துதலையும் கொடுப்பதற்கேற்ற ஆசாரியத்துவ முறைமையை அவர் ஏற்கனவே ஆயத்தப்படுத்தியிருந்தார். நியாயப்பிரமாணம் ஆவிக்குரிய சட்டமாகவும், தேசிய சட்டமாகவும் அவர்களுக்கு பயன்பட்டது. *எண்ணாகமம் 1:16;3:11;18:1-32; யோசுவா 21:1-3.* இக்காலத்திலுள்ள தேசிய சட்டங்களைப் போலவே இந்தப் பிரமாணங்கள் செயல்பட்டு வந்தன; எடுத்துக்காட்டாக யுத்தம் வந்தால் எப்படி செயல்பட வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. பார்க்கவும் *உபாகமம் 20:1-4.*

"சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான்; அந்நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது; பிரத்தியட்சமான தரிசனம் இருந்ததில்லை." *1 சாமுவேல் 3:1.* தேவனுடைய பிரதான ஆசாரியனாகிய ஏலியிடம் பேசியதே தேவனுடைய தீர்க்கதரிசியாக சாமுவேல் செய்த முதல் வேலையாகும். ஏலி தன் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதில் தோல்வியடைந்துவிட்டான். வாசிக்கவும் *1 சாமுவேல் 3:10-21.* கீழ்ப்படியாத மக்களுடன் ஐக்கியம் கொள்ளக்கூடாது என்ற இயேசுவின் புத்திமதியை மதிக்காத "கிறிஸ்தவ சமுதாயத்தைப் போல"

கீழ்ப்படியாத பிள்ளைகளின் தகப்பனாயிருந்து வந்த இந்த பிரதான ஆசாரியனால் இஸ்ரவேல் தேசமே சீர் கெட்டுப்போனது. தேவன் தம்முடைய உடன்படிக்கைகளில் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த எல்லாவற்றின் படியும் இஸ்ரவேலருக்கு செய்தார். அவர்கள் அவருடைய உடன்படிக்கைக்கு தகுந்தபடி தங்கள் தேசத்தையும், வாழ்க்கையையும், அமைத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் அவர்களை விட்டு விலகியிருந்தார். ஆனாலும், அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமையும், அந்த தேசத்தின் தலைமை நிர்வாகமும் சீர்கேடு அடைந்ததினால், சாமுவேல் தீர்க்கதரிசியைப் பயன்படுத்தி தமது ராஜ்ய உரிமையை மறுபடியும் அங்கே நிலைக்கச் செய்தார். “சூரியனுக்குக் கீழே” அவன் வாழ்நாட்கள் முழுவதிலும் அவன் தேவனையே சேவித்தான்.

தேவன் மோசேயை பயன்படுத்தியது போலவே சாமுவேலையும் பல வழிகளில் பயன்படுத்திக் கொண்டார். இந்த உறவு நெருக்கமானதாக இருந்தது. ஆனால் “முகம் முகமாய்” பேசுமளவிற்கு இல்லை. மற்ற நாடுகளில் உள்ளது போல தங்களுக்கும் ராஜா வேண்டும் என்று இஸ்ரவேலர் கேட்ட போது சாமுவேலுக்கும், தேவனுக்கும் இடையில் நடந்த உரையாடலைக் கவனியுங்கள். பார்க்கவும் *1 சாமுவேல் 8:6-9.* பெலிஸ்தருக்கு எதிரான யுத்தத்தை வழிநடத்தும்படியும் சாமுவேலை தேவன் பயன்படுத்தினார். இதே விதமாக அவர் யோசுவாவையும் பயன்படுத்தி இருந்தார். *1 சாமுவேல் 7:5-13.* “பரம்பரை முறை” அடிப்படையில் நியாயாதிபதிகளை நியமித்ததன் மூலமாக நியாயத்தீர்ப்பிலே சாமுவேல் ஒரு தவறு செய்தான். “நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும் எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக் கொண்டோம்” என்று சொன்ன இஸ்ரவேலருடைய பாவங்கள் இன்னும் அதிகரிப்பதற்கு சாமுவேல் அவர்களுக்கு நியாயாதிபதிகளாக நியமித்திருந்த அவனுடைய சொற்பேச்சைக் கேளாத இரண்டு பிள்ளைகளும் காரணமானார்கள். *1 சாமுவேல் 8:1-15; 12:19.*

தேவன் இஸ்ரவேலருக்கு தைரியமும், வலிமையும் உள்ள ஒரு மனிதனையே ராஜாவாக கொடுத்தார்; இருந்தபோதிலும், நாட்டின்





காரியங்களை அவருடைய இஷ்டத்தின்படி செய்தவற்கு, அவரையே சார்ந்திருக்க போதுமான அளவிற்கு விசுவாசம் இல்லாதவனாகவே சவுல் இருந்தான். இஸ்ரவேலருடைய சரித்திரத்தில் இந்தப் பிரச்சனையும்கூட மறுபடியும் மறுபடியும் நிகழக்கூடிய ஒன்றாக இருந்தது. படைபலமுள்ள ராஜாவானவன் ஆசாரியத்துவ முறைமை மீதும் தன் அதிகாரத்தை செலுத்த ஆரம்பித்தான். ராஜாவும், பிரதான ஆசாரியனும் சுய விருப்பத்தின்படி நடந்து கொள்பவர்களாக இருந்த காலங்களில் மக்கள் மிகக் கடுமையாக துன்பப்பட நேர்ந்தது.

இஸ்ரவேலருடைய அடுத்த ராஜாவாக சிறந்த மனிதனைத் தேவன் தேர்ந்தெடுத்தார், ஆனால் தேவனுடைய ராஜ்ய உரிமையை தாவீது அசட்டைபண்ணினபோது சாமுவேலைக் கொண்டு சவுலைக் கடிந்துகொண்டது போலவே, நாத்தான் தீர்க்கதரிசியைக் கொண்டு அவர் தாவீதைக் கடிந்துகொண்டார். *1 சாமு. 15:16,22,23; 2 சாமு. 12:7-13.* தேவன் தமது ராஜ்யத்தின் மாம்சத்துக்குரிய பகுதியை நிலைநிறுத்துவதற்கு அவர் பயன்படுத்திய தனித்துவம் உடைய முன்று காரியங்களை *1 இராஜாக்கள் 1:28-34* வரை உள்ள வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. **தேவனுடைய தேசத்தின் மீது** தாவீது ராஜாவாக இருந்தான். **லேவிய ஆசாரியத்துவ முறைமையின்படி** சாதோக்கு பிரதான ஆசாரியனாயிருந்தான். தேவன் பரலோகத்தில் இருந்து தமது அதிகாரத்தை செலுத்துவதற்கு பயன்படும்படியாக நாத்தான் **தீர்க்கதரிசி**யாயிருந்தான். மேசியா வருவதற்கு ஏற்ற காலம் வரும் வரையிலும் யாக்கோபின் சந்ததியை பாதுகாத்து வழிநடத்தும்படிக்கு இஸ்ரவேலருடைய தேசத்தையும், லேவிய ஆசாரியத்துவ முறைமையையும், தீர்க்கதரிசிகளையும் அவர் பயன்படுத்திக்கொண்டார். “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை” தேவன் தமது ஆவிக்குரிய நித்திய ராஜ்யத்தில் குமாரராகவும், குமாரத்திகளாகவும், நிலைநிறுத்தினார். பார்க்கவும் *ரோமர் 2:28,29;9:6-8;11:1-6. 2 சாமுவேல் , 1& 2 ராஜாக்கள்* மற்றும் *1&2 நாளாகமம்* ஆகிய புத்தகங்களில் தேவன் தெரிவிக்கின்ற மீதமுள்ள

விவரங்கள், ராஜாக்களையும் அவர்களுடைய செயல்பாடுகளையும் நமக்குத் தெரியப்படுத்துகின்றன.

ராஜாக்களின் சரித்திரத்தை வெளிப்படுத்தி அறிவிப்பது இந்தப் பாடத்தின் நோக்கம் **அல்ல**. இருப்பினும், இந்த ராஜாக்களின் சரித்திரப் பின்னணியை வைத்து தீர்க்கதரிசிகளை தேவன் பயன்படுத்தியதை குறித்து நாம் புரிந்துகொள்ளமுடியும். தேவன் தாமே நியமித்திருந்த ராஜாக்களுக்கெல்லாம் அவரே ராஜாவாக இருந்தார். "சர்வ வல்லமையுள்ள தேவன்" எகிப்து தேசத்தில் தமது வல்லமையை பயன்படுத்தி ஆட்சி செய்ய விரும்பியிருப்பாரானால், அது எளிதான ஒரு காரியமாக இருந்திருக்கும் : இஸ்ரவேலர் வனாந்திரத்தில் இருந்த 40 ஆண்டு காலத்தில் வேறுபட்ட சூழ்நிலைகளில் அவர் தமது வல்லமையை வெளிக்காட்டினார். ஆயினும், " வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை" தமது நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளாக இருக்கச் செய்யும் நோக்கம் நிறைவேறுவதற்கு இது பயனளிக்கவில்லை. மக்களுடைய மனங்களிலும், இருதயங்களிலும் தம்முடைய ராஜ்யத்தை நிலைநிறுத்துவதற்கு இஸ்ரவேல் தேசத்தின் மீது தமது ராஜ்ய உரிமையை எப்படி நிலைநிறுத்தினார் என்பதை புரிய வைப்பதே இப்பாடத் தொகுப்பில் உள்ள எல்லா பழைய ஏற்பாட்டு பாடங்களின் பரந்த நோக்கமாகும்.

பழைய ஏற்பாட்டு விவரங்களை நாம் படிக்கும் போது நம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய காரியம் இதுதான். தனி நபர் விவரங்களை நாம் வாசிக்கும்போது, நாம் கேட்பது, "சவுல், தாவீது மற்றுமுள்ள எல்லா ராஜாக்களையும் பயன்படுத்தி தேவன் என்ன செய்துகொண்டிருந்தார்?" அடுத்ததாக நாம் கேட்பது இது, "அவர் செய்துகொண்டிருந்த காரியம் அவருடைய சிருஷ்டிப்புகளாகிய நாம் பிள்ளைகளாக இருக்கவேண்டும் என்ற அவருடைய நோக்கம் நிறைவேறுவதற்கு எப்படி பயனுள்ளதாக இருந்தது?" இப்பாடத்தின் மீதமுள்ள பகுதியில் "தேவன் சர்வவல்லமை யுள்ளவர்" என்பதை காண்பிக்கும்படியாக பல தீர்க்கதரிசிகளை நாம் கவனிக்கப் போகின்றோம். தீர்க்கதரிசிகள் மூலமாக பேசின இதே தேவன் கிறிஸ்தவர்களுக்கு பிதாவாக இருக்கின்றார் என்பதை நாம் நினைவில்





வைத்துக்கொள்ள வேண்டும். அவர் கனிவும், அன்பும், பொறுமையும் உள்ளவராய் இருக்கின்றார். ஆனாலும் அவர் "நியமிக்கும் எல்லையை" நாம் தாண்டவே கூடாது. *எபிரெயர் 12:28,29*. நாம் நம்முடைய சிந்தனைகளில் தனிமைப்படுத்திக்கொண்டு பின்வரும் சூழ்நிலைகளில் சர்வ வல்லமையுள்ள தேவன் பேசுவதை கவனிப்போம். பவுல் பல்வேறுபட்ட மக்களுக்கு சுவிசேஷ ஊழியத்தை செய்தபோது, இந்த தனிமைப்படுத்திக் கொள்ளும் செயலை செய்திருக்கிறான். பார்க்கவும் *1 கொரி. 9:19-23*. அவன் பல வித்தியாசமான நம்பிக்கைகளை உடைய மக்களுடன் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளும்படியாக தன்னுடைய உண்மையான நம்பிக்கைகளை சற்றுத்தூரம் வைத்துவிட்டான். இதைத் தான் அவன் தன்னை தனிமைப்படுத்திக்கொள்வதாக சொல்கின்றோம். வாக்கு வாதங்களை தவிர்ப்பதற்காக சுவிசேஷகர்கள் இந்த முறையை பயன்படுத்துகிறார்கள்.

1. "ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார்." *1 இராஜா.11:9,10*. தேவன் அகியா தீர்க்கதரிசியை யெரொபெயாமிடம் அனுப்பி இந்தச் செய்தியை சொல்லச் சொன்னார்: "இதோ, நான் ராஜ்யபாரத்தைச் சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்துக் கிழித்து, உனக்குப் பத்துக் கோத்திரங்களைக் கொடுப்பேன். ஆனாலும் என் தாசனாகிய தாவீதுக்காகவும், நான் இஸ்ரவேல் கோத்திரங்களில் எல்லாம் தெரிந்துகொண்ட எருசலேம் நகரத்துக்காகவும், ஒரு கோத்திரம் அவனுக்கு இருக்கும்." *1 இராஜாக்கள் 11:31,32*. சாலொமோனுடைய ஆட்சிக் காலத்தில் இது நிகழவில்லை. ஆயினும் அவன் மரித்தபோது தேவன் இரண்டு தேசங்களை உருவாக்கினார். சாலொமோனுடைய மகனாகிய ரெகொபெயாம், பென்யமீன் கோத்திரத்தை உள்ளடக்கிய யூதாவுக்கு ராஜாவாயிருந்தான். *1 இராஜாக்கள் 12:22,23*.

2. தேவன் யெரொபெயாமை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்கினார். ஆனால் அவனோ வெகு சீக்கிரத்தில் விக்கிரகங்களை உண்டுபண்ணி அந்தப் பத்துக் கோத்திரத்தார் அவைகளை வணங்கும்படி செய்து விட்டான். *1 இராஜாக்கள் 12:25-33.* யாக்கோபின் வழியாக உண்டான இந்த ஆபிரகாமின் சந்ததியாரை சாத்தான் முழுவதுமாக ஆண்டு கொள்வதை தேவன் விரும்பியதில்லை. இந்த ஜனங்களுக்கு உணவு முதலான தேவைகளை சந்தித்து வந்தவர் தேவன் தான் என்றும், விக்கிரக தெய்வங்கள் அதை செய்வதில்லையென்றும் அவர்களுக்கு புரியவைப்பது சிரமமாக இருந்தது. அவர் பின்வரும் செய்தியுடன் எலியா தீர்க்கதரிசியை இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடம் அனுப்பினார். "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்." *1 இராஜா. 17:1.* "கர்த்தரே தெய்வம் – கர்த்தரே தெய்வம்" என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தும்படியாகவும், பாகாலின் தீர்க்கதரிசிகளின் மீது தமது வல்லமையை வெளிப்படுத்தும்படியாகவும் எலியாவை அவர் ஒரு கருவியாக பயன்படுத்திக்கொண்டார். *1 இராஜா. 18:39.*

3. தேவன், தமது ராஜ்ய உரிமையை நிலைநிறுத்தும்படியாக மேற்கொள்ளும் பிரதான நடவடிக்கையைக் குறித்து இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு தெரியப்படுத்தும்படியாகவும், அற்புதங்களை செய்யும்படியாகவும், எலியாவின் எல்லா வல்லமைகளையும், எலிசாவுக்கு தந்தருளினார். *2 இராஜாக்கள் 2:9-12.* இரண்டு தீர்க்கதரிசிகளுமே தேவனுடைய செய்திகளை அயல்நாட்டு அதிகாரிகளுக்கு கொண்டுசென்றார்கள். இஸ்ரவேலரை சீர்ப்படுத்தும்படியாகவும், கடைசியாக அவர்களை அழிக்கும்படியாகவும் இதைச் செய்தார்கள். *1 இராஜா. 19:15-18; 2 இராஜா. 8:7-15.* யோவாசுக்கு செய்தி அனுப்புவதன் மூலமாக இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்களை நீண்ட காலத்துக்கு இருக்கச் செய்யும்படி, தேவன்





எலிசாவை இறுதியாக பயன்படுத்திக்கொண்டார். *2 இராஜா. 13:14-20.* எலிசா மரணமடைந்து நூறு ஆண்டுகள் கழித்து அசீரியர்களால் பத்துக் கோத்திரங்களும் சிறைப்பிடிக்கப்பட்டன.

4. மேலே குறிக்கப்பட்ட தீர்க்கதரிசிகள் எல்லாரும் பெரும்பாலும் வாய்வழியாகவே தேவனுடைய செய்தியை தெரிவித்ததாக பார்க்கின்றோம்; ஆயினும், "மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடித்தபின்பு, மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரை நோக்கி: நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும்" என்று மோசே சொல்லிய இந்த இடத்தில் அவன் எழுத்து வடிவத்திலும் தேவனுக்காக வேலை செய்திருப்பதை நாம் பார்க்கமுடிகிறது. *உபாகமம் 31:24-26.* "சாமுவேல் ராஜாங்கத்தின் முறையை ஜனங்களுக்குத் தெரிவித்து, அதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, கர்த்தருடைய சந்நிதியில் வைத்து, ஜனங்களையெல்லாம் அவரவர் வீட்டுக்கு அனுப்பிவிட்டான்." *1 சாமுவேல் 10:25.*

5. மக்களுக்கு தெரிவிக்கும்படியாக தேவனுடைய வார்த்தைகளை பெற்றுக்கொண்ட மற்றத் தீர்க்கதரிசிகள் அவைகளை ஜாக்கிரதையாக எழுதி வைத்தார்கள். எடுத்துக்காட்டாக, யோவாசின் குமாரனாகிய இரண்டாம் யெரொபெயாம் ஆட்சி செய்த காலத்தில் ஓசியா தீர்க்கதரிசனம் உரைத்தான். தேவனுடைய வார்த்தைகள் வாய் மொழி தீர்க்கதரிசிகள் மூலமாக முக்கியமாக ராஜாக்களுக்கே அனுப்பப்பட்ட போதிலும் அவைகள் எல்லா மக்களுக்கும் கற்றுக்கொடுக்கும் வகையிலும் அமைந்திருந்தன. அவர் ஓசியாவைக் கொண்டு எழுத்து மூலமாய் தெரிவித்த செய்தியானது இஸ்ரவேலுக்கு மாத்திரமல்ல யூதாவுக்கும் உரியதாய் இருந்தது. இருந்தபோதிலும், பத்துக்

கோத்திரங்களின் ஆவிக்குரிய நிலைமையை முக்கியப்படுத்தியே அந்தச் செய்தி அமைந்திருந்தது. *ஓசியா 1:7;5:5;6:11.* எப்பிராயீம் கோத்திரத்தார் அந்நிய ஜனங்களோடே கலந்ததினாலும், பொய்களை பேசியதாலும், கொடுமையினாலும் தனித்துவிடப்பட்டார்கள். *ஓசியா 7:8,11;9:16;10:11; 12:1;13:1.*

ஓசியாவின் கதையின் மூலமாகவே தேவனுடைய செய்தி தெரிவிக்கப்பட்டது. "கர்த்தர் ஓசியாவை நோக்கி: நீ போய், ஒரு சோரஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள்; தேசம் கர்த்தரை விட்டு விலகிச் சோரம்போயிற்று என்றார்." *ஓசியா 1:2.* இஸ்ரவேலுக்கு எதிரான தேவனுடைய குற்றச்சாட்டு; "தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை; தேவனைப்பற்றிய அறிவும் இல்லை." *ஓசியா 4:1.* "அவர்களோ ஆதாமைப்போல் உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள்." *ஓசியா 6:7.* தேவனைப் பற்றிய அறிவை வெறுக்கின்ற பாவத்தை ஆசாரியர்கள் செய்தார்கள். *ஓசியா 4:6-8.* "நம்முடைய ராஜாவின் நாளென்று சொல்லி, அதிபதிகள் திராட்சரசத் துருத்திகளால் அவனுக்கு வியாதியுண்டாக்குகிறார்கள்; சரசக்காரரோடே கூட அவன் தன் கையை நீட்டுகிறான்." *ஓசியா 7:5.* இஸ்ரவேலருடைய குணம் மாறவே இல்லை; "தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள்; திருப்தியானபின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று; அதினால் என்னை மறந்தார்கள்." *ஓசியா 13:6.* "அவர்கள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலகிப்போய்விட்டார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங் களுக்குத் தூபங்காட்டினார்கள்." *ஓசியா 11:2.*

பத்துக் கோத்திரத்தாருடைய வாழ்க்கைத் தரமானது ஆரோக்கியமான குடும்பங்களை உருவாக்குவதற்கு தகுந்ததாக இல்லாததினால், நோவாவின் நாட்களில் தேவன் முடிவு எடுத்தது போல ஒரு முடிவு எடுத்து அசீரியருடைய சிறைப்பிடிப்புக்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிட்டார்.





தேசத்தின் கலாச்சாரத்தின் காரணமாக சிறுபிள்ளைகளுடைய பிறப்பின் சூழ்நிலைகளால் உருவாக்கப்பட்டிருந்த "வாழ்க்கைப் பெட்டிகளிலிருந்து" அந்தப் பிள்ளைகளால் ஒரு போதும் வெளியே வர முடியாது என்பதை தேவன் அறிந்திருந்தார். இந்தப் பாடத் தொகுப்பின் அறிமுக பகுதியை பாருங்கள். "நான் கோபத்திலே உனக்கு ராஜாவைக் கொடுத்தேன்; என் உக்கிரத்திலே அவனை எடுத்துக்கொண்டேன்." *ஓசியா 13:11.*

6. "பெத்துவேலின் குமாரனாகிய யோவேலுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்" தூக்கத்தில் இருந்து ஒருவரை எழுப்புவதற்கு குரல் கொடுப்பது போல அமைந்திருக்கின்றது. *யோவேல் 1:1.* தேவன் வறட்சியையும், கொள்ளை நோயையும், மக்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்படி அந்நியர்களையும் அனுமதித்து இருந்தார். யோவேலின் செய்தி இது: "சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்." *யோவேல் 2:15.* "ஒருவேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் போஜனபலிகளையும் பானபலிகளையும் செலுத்துகிறதற்கான ஆசீர்வாதத்தைத் தந்தருளுவார்." *யோவேல் 2:14.*

இஸ்ரவேலருடைய "உள்ளான/புறம்பான மனிதனுக்கு" வேண்டிய நிறைவான ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தமாக அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன; "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்." *யோவேல் 2:28.* பார்க்கவும் *அப். 2:16-21.* மேசியாவின் வருகைக்கு பிற்பாடு இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது. அவர் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தார்; புதிய உடன்படிக்கையின் நிமித்தம் ஜீவப்பிரமாணத்தை வெளிப்படுத்தினார்; எல்லா மக்களையும் சுத்திகரிக்கும்படியாக தமது ஜீவனைத் தந்தார். பிதாவாகிய தேவனால் மகிமையும் படுத்தப்பட்டார். பரிசுத்த ஆவியானவர் உடனான ஐக்கியம் வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டது. *யோவான் 7:37-40.* தேவன் பதிவு

செய்து கொடுத்துள்ள சரித்திரம் முழுவதையும் நாம் ஆராய்ந்து பார்ப்போமானால், பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் "கிறிஸ்துவுக்குள்ளான" தேவ மக்களோடு "ஒவ்வொரு நிமிடமும்" இணைந்திருப்பது போல எந்தக் காலத்திலும் இருந்தது இல்லை. பார்க்கவும் *2 கொரி. 13:14; 1 பேதுரு 1:2.* தெய்வீகத் தன்மை உள்ள மூவருமே இரவும் பகலும் ஒரு நிமிட இடைவெளி கூட இல்லாமல் கிறிஸ்தவர்களுக்காக வேலை செய்து கொண்டிருக்கின்றனர். தேவனைத் துதியுங்கள்!

7. தெக்கோவா ஊர் மேய்ப்பருக்குள் ஒருவனாய் இருந்த ஆமோஸ் மூலமாக பத்துக் கோத்திரத்தாருக்கு தேவன் செய்தி அனுப்பினார். "உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள்; உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; உன் வயல் அளவு நூலால் பங்கிட்டுக்கொள்ளப்படும்; நீயோவெனில் அசுத்தமான தேசத்திலே செத்துப்போவாய்; இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறை பிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்." *ஆமோஸ் 7:17.* இஸ்ரவேலருடைய பாவங்கள் அவர்களுடைய தேசத்தின் கலாச்சாரத்தோடு பதிந்துபோயிருந்தன. பாவத்தின் ஆக்கிரமிப்பினால் அவர்களுடைய அளவுகோல்கள், அநியாயமானவைகளாக மாற்றப்பட்டன. இதனால் ஜீவனுக்கு ஏதுவாய் இருந்த அவர்களுடைய கலாச்சாரம் மரணத்துக்கு ஏதுவானதாக மாறியது. பார்க்கவும் *ஆமோஸ் 8:4-6; ரோமர் 5:21.*

8. யாக்கோபின் சகோதரனாகிய ஏசாவின் சந்ததியாரைக் குறித்து ஒரு தரிசனத்தை தேவன் ஒபதியாவுக்கு காண்பித்தார். ஏதோமியர்கள் தங்கள் சகோதரரான இஸ்ரவேலின் சந்ததியாரிடம் பகைமை உணர்வோடு நடந்துகொண்டதனால் தேவன் அவர்களை எச்சரித்தார். *ஒபதியா 12.* தேவன், இஸ்ரவேல் மக்களை கொடுமையாக நடத்தும்படி அவர்களுடைய அண்டை நாடுகளுக்கு அனுமதி கொடுத்திருந்தார்; அந்த அண்டை நாடுகளுக்கும் தம்முடைய செய்தியை ஆமோஸ்





வழியாக தெரியப்படுத்தினார். *ஆமோஸ் 1:3,6,9,13;2:1.* எல்லா தேசங்கள் மீதும் தேவன் அதிகாரம் உள்ளவராக இருந்தார். எல்லா தேசத்து மக்களிடமும் அவர் அன்பு கொண்டிருந்தார். அவர் ஆபிரகாமுக்கு பண்ணியிருந்த வாக்குத்தத்தத்தின்படி நீண்ட காலத்துக்குப் பிறகு தமது புதிய உடன்படிக்கையின் மூலமாக அவர்களைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ளும் ஒரு திட்டம் அவருக்கு இருந்தது. தமது மக்களை சீர்ப்படுத்தும்படி இந்தப் பொல்லாத தேசங்களை அவர் பயன்படுத்திக்கொண்டார். *ரோமர் 9:16-24.*

9. தேவன் யோனாவுக்கு இவ்விதமாய் கட்டளையிட்டார்; "நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது." *யோனா 1:2.* "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்." *யோனா 3:10.*

10. நினிவே மக்கள் மனந்திரும்பிய நிலையில் நீண்ட காலம் நீடிக்கவில்லை. "நினிவேயின் பாரம்" என்று தேவன் தம் மனதில் நினைத்த செய்தியை நாகூம் என்ற மற்றொரு தீர்க்கதரிசியின் மூலம் அவர்களுக்கு தெரியப்படுத்தினார். இந்தப் பாரம் இவ்விதமாக தெரிவிக்கப்பட்டது: "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார்; இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்." *நாகூம் 1:7,8.* பழைய ஏற்பாட்டுப் பகுதியில் மனிதர்களோடு தேவனுடைய சந்திப்பு நிகழ்ந்த சம்பவங்களையெல்லாம் கவனித்தோமானால், அவருடைய குணத்தைப் பற்றி நாம் முழுமையாக கற்றுக்கொள்ள முடியும். ஏனெனில் கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல" ஆசீர்வாதங்களையும் அனுபவித்து மகிழ்கின்றார்கள், மோசேயின் "பிரமாணத்தை" போன்ற

பிரமாணத்தினின்று விடுதலையும் அடைந்திருக்கிறார்கள். சில மக்கள் நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்து "கிருபையால் இரட்சிக்கப்பட்டு விடுவோம்" என்ற நம்பிக்கையோடு இருக்கின்றார்கள். நமது பிதாவாகிய தேவனைப்பற்றி பழைய ஏற்பாட்டுப் பகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். *ரோமர் 15:4; எபி.12:28,29.* இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது தேவனுடைய மக்களுக்கு கிருபை அளிக்கப்படும் என்பது உண்மை தான்; ஆனால், நியாயத்தீர்ப்பு நாளிலே நமது "செய்கைகளின்" அடிப்படையிலேயே தீர்ப்பு அளிக்கப்படும் என்பதை கவனிக்க வேண்டும். *2 கொரி. 5:10; 1 பேதுரு 1:13.* உண்மையில் இந்த சிந்தனை முரண்பட்டது போல் தோன்றுகிறது. ஆனாலும், ஒவ்வொரு ஜீவாத்துமாவுக்கும் எத்தனை தாலந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன, என்ன பலனை அந்தந்த ஜீவாத்துமாக்கள் கொடுக்கவேண்டும் என்பதெல்லாம் தேவனுக்கும், இயேசுகிறிஸ்துவுக்கும் நன்றாகத் தெரியும். பார்க்கவும் *மத்தேயு 25:14-30; லூக்கா 19:11-27; யோவான் 5:28-30.*

11. யூதேயாவின் எருசலேம் நகரத்திலும், இஸ்ரவேலின் பிரதான நகரமாகிய சமாரியாவிலும், எவ்விதத்தில் கலாச்சாரம் சீர்கேடு அடைந்திருந்தது என்பதைப் பற்றி மீகாவுக்கும் தேவன் தரிசனத்தைக் காண்பித்தார். "**நன்மையை வெறுத்து தீமையை**" அவர்கள் விரும்பியதாக தேவன் அறிவித்தார். *மீகா 3:2.* தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால் அவர்கள் ஏழைகளை கொள்ளையடித் தார்கள். *மீகா 2:1.* தீமை செய்வதுதான் நல்லது என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருந்தார்கள். தங்களுடைய பொல்லாத செயல்களைக் குறித்து தங்களுடைய மனச்சாட்சி குற்றஞ்சாட்டாதபடிக்கு தங்கள் இருதயங்களை கடினப்படுத்திக்கொண்டார்கள். அரசியலில் தலைவர்களாக இருப்பது "லாபகரமான ஒரு தொழில்" என்ற நிலை அங்கு இருந்தது, இது தீராத வியாதியாக இருந்தது; இதன் மூலம் தீய காரியங்களை சட்டப்பூர்வமானவைகளாக அவர்களால் மாற்றிக் கொள்ள முடிந்தது.





12. "மிலாற்றிற்கும் அதை **நேமித்தவருக்கும்** செவிகொடுங்கள்" என்ற தரிசனத்தை இஸ்ரவேலை எச்சரிக்கும்படி தேவன் மீகாவுக்கு காண்பித்த காலத்தில் எருசலேமையும், யூதாவையும் குறித்த தரிசனங்களை அவர் ஏசாயாவுக்கு காண்பித்தார். *மீகா 6:9.* தேவன் தமது உன்னதமான ஆளுகை செய்யும் வல்லமையை வெளிப்படுத்தக்கூடிய செய்தியை யூதாவுக்கும், இஸ்ரவேலுக்கும் மற்ற நாடுகளின் சேனைகளுக்கும் அறிவிக்கும்படி ஏசாயாவை பயன்படுத்தினார். "நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; **என்னைத்தவிரத் தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும்,** சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்." *ஏசாயா 44:6.* ஆபிரகாமுடைய சந்ததியாகிய யாக்கோபின் பிள்ளைகளால் உருவான தேவனுடைய தேசமானது, தனக்கு அவர் ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்த போதிலும், அத்தேசத்து மக்களுக்கு அவர் ராஜாவாகத்தான் இருந்தார். ஏசாயா கண்ட தரிசனங்கள் தேவனை "ராஜாதி ராஜாவாக" காண்பித்தன. ஏசாயா புத்தகத்தின் முதல் 39 அதிகாரங்கள், சுற்றியிருந்த அண்டை நாடுகளைக் கொண்டு அவர் தமது மக்களை தண்டித்ததை பற்றி அறிவிக்கின்றன. அதன் பிற்பாடு, உள்ள அதிகாரங்கள் அந்த அண்டை நாடுகளுக்கு எதிராக அவர் தமது வல்லமையை பயன்படுத்தியதை தெரிவிக்கின்றன.

எடுத்துக்காட்டாக, "தமஸ்குவின் ஆஸ்தியும், சமாரியாவின் கொள்ளையும்," அசீரிய ராஜாவினால் கொள்ளையடிக்கப்படும்படி, அந்த ராஜாவுக்கு அதிகாரம் அளிக்க தேவன் ஏசாயாவை அனுப்பினார். *ஏசாயா 8:4.* அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப், எருசலேமிலிருந்த எசேக்கியா ராஜாவை தாக்குவதற்கு ஆயத்தமான போது, அந்த அசீரிய ராஜாவுக்கு எதிரான ஒரு நீண்ட செய்தியை ஏசாயா மூலமாக தேவன் தெரியப்படுத்தினார். பார்க்கவும் *ஏசாயா 37:22-35.* "அப்பொழுது கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்களெல்லாரும் செத்த பிரேதங்க ளாய்க் கிடந்தார்கள்." *ஏசாயா 37:36.*

தேவன் கண்ணுக்குத் தெரியாதவரும், எல்லாவற்றிற்கும் மேலானவருமாக இருக்கிறார். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்." *ஏசாயா 57:15.* தேவனால் உயிர்ப்பிக்கப்பட்ட "வாக்குத்தத்தத்தின் பிள்ளையின்" "நொறுங்குண்டு பணிந்த" ஆவியில் தேவனுடைய ராஜ்யம் இருப்பதை நாம் காணமுடியும். 40ஆம் அதிகாரம் முதற்கொண்டு தெரிவிக்கப்பட்டுள்ள தேவனுடைய செய்தியில், ஆறுதலும் நம்பிக்கையும் மையப்பொருளாக அமைந்துள்ளன. இந்தச் செய்தி முதல் பாகம் முழுவதிலும் பரவலாக காணப்படுகிறது; இதன் மூலம் "மேசியாவின்" வருகையைப் பற்றிய நம்பிக்கை கிடைக்கின்றது. எரேமியா மற்றும் எசேக்கியேல் புத்தகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களைக் கொண்டு இந்தப் பாடத்தை முடிவுக்கு கொண்டு வரலாம்.

13. யோசியாவின் முப்பத்தொரு வருட அரசாட்சியின் பொழுது, செப்பனியாவும், எரேமியாவும் தேவனுடைய வார்த்தையை யூதாவிடம் பேச ஆரம்பித்தார்கள். "யோசியாவாகிய" "அவன் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில், வலது இடதுபுறமாக விலகாமல் நடந்தான்." *2 நாளா.34:2.* இவன் அரசாண்டு வந்த காலத்தில், மோசேயைக் கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை ஆசாரியனாகிய இல்க்கியா கண்டெடுத்தான். *2 நாளாகமம் 34:14.* நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை ராஜா கேட்டபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான். *2 நாளாகமம் 34:19.* இவன் தகப்பனாகிய ஆமோனும், பாட்டனாராகிய மனாசேயும் யூதேயாவுக்கும், எருசலேமுக்கும் விரோதமாக தேவன் கடுங்கோபம்





கொள்ளுமளவிற்கு மிகவும் பொல்லாதவர்களாய் நடந்து கொண்டார்கள். செப்பனியா தெரிவித்த தேவனுடைய வார்த்தையாவது, "இடுக்கண் செய்து, ஊத்தையும் அழுக்குமாயிருக்கிற நகரத்துக்கு ஐயோ! அது சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; அது கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவில்லை; அது கர்த்தரை நம்பவில்லை; அது தன் தேவனிடத்தில் சேரவில்லை." *செப்பனியா 3:1,2.* உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடமிருந்து யோசியா கற்றுக்கொண்டது, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறதாவது, இதோ, யூதாவின் ராஜாவுக்கு முன்பாக வாசிக்கப்பட்ட புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சகல சாபங்களுமாகிய பொல்லாப்பை நான் இந்த ஸ்தலத்தின்மேலும் இதின் குடிகளின்மேலும் வரப்பண்ணுவேன்." *2 நாளாகமம் 34:23,24. உபாகமம் 28:15* முதல் *68 வரை* உள்ள வசனங்களில் மோசே எழுதியிருந்தவைகளை யோசியா அறிந்து கொண்டான்.

கொடுமையினாலும், அக்கிரமத்தினாலும், கொள்ளையினாலும், நியாயப்பிரமாணம் பெலவீனமாகிவிட்டதாக ஆபகூக் தீர்க்கதரிசி தேவனிடம் முறையிட்டான். *ஆபகூக் 1:2-4.* இதற்கு தேவன் அளித்த பதில்; "நீங்கள் புறஜாதிகளை நோக்கிப்பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்; விவரிக்கப்பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன். இதோ, நான் கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்; அவர்கள் தங்களுடையதல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ளத் தேசத்தின் விசாலங்களில் நடந்துவருவார்கள்." *ஆபகூக் 1:5,6.*

தேவன் எரேமியாவை அவன் தாயின் வயிற்றிலிருந்து வெளிப்படும் முன்னமே பரிசுத்தம்பண்ணி, "ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக்" கட்டளையிட்டார். *எரேமியா 1:5.* தேவன் எரேமியாவைக் குறித்து சொன்னது, "இதோ, தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும், தேசத்தின்

ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன். அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." *எரேமியா 1:18,19.* சிறைவாசத்துக்கும், அவமானங்களுக்கும், அடிகளுக்கும் மத்தியிலும் ஆபகூக் தீர்க்கதரிசிக்கு தேவன் சொன்ன வார்த்தை நிறைவேறும் வரையிலும் எரேமியா தைரியமாயிருந்தான்.

நாம் அவசியம் கேட்கவேண்டிய கேள்வி இது: "தமக்கு பிள்ளைகளாயிருக்கும்படிக்கு தேவன் உருவாக்கின மக்களை அவர் அகற்றிவிட்டதற்கான கடைசி காரணம் என்ன?" தேவன் பாபிலோனியர் களை வரவழைத்து எருசலேமை அழித்து, மீதமிருந்த ஜனங்களை அடிமைகளாக பிடித்துச் செல்லும்படி செய்ததற்கு முன்பாக யூதேயா இருந்த நிலைமையைப் பற்றி தேவன் தெரிவிக்கும் விவரங்களை பின்வரும் வசனங்களில் காணலாம்.

*எரேமியா 2:11-13*

> *"எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ என்றும் பாருங்கள்; என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள். வானங்களே, இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து, மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்."*

*எரேமியா 4:22*

> *"என் ஜனங்களோ மதியற்றவர்கள், என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள்; அவர்களுக்கு உணர்வே இல்லை;* **பொல்லாப்புச் செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்."**





*எரேமியா 5:27-29*

> *"குருவிகளால் கூண்டு நிறைந்திருக்கிறதுபோல், அவர்கள் வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது; ஆதலால் அவர்கள் பெருகி ஐசுவரியவான்களாகிறார்கள், கொழுத்து, சளுக்குப்பண்ணுகிறார்கள்; துன்மார்க்கனுடைய செயல்களைக் கண்டிக்காமல் விடுகிறார்கள்; திக்கற்றவனுடைய வழக்கை விசாரியாமல், தாங்கள் மாத்திரம் வாழுகிறார்கள்; எளியவர்களின் நியாயத்தைத் தீரார்கள். இவைகளை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

*எரேமியா 6:15*

> *"அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங் காலத்தில் இடறுண்டுபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

*எரேமியா 11:10,11*

> *"அவர்கள் என் வார்த்தைகளைக் கேட்கமாட்டோமென்று அந்நிய தேவர்களைச் சேவிக்க அவைகளைப் பின்பற்றி, தங்களுடைய முன்னோர்களின் அக்கிரமங் களுக்குத் திரும்பினார்கள்; நான் தங்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையை இஸ்ரவேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் மீறிப் போட்டார்கள். ஆகையினால் இதோ, அவர்கள்*

*தப்பித்துக்கொள்ளமாட்டாத தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்; அப்பொழுது என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் அவர்களைக் கேளாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.”*

“ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்கிறவனாகிய காவற்சேனாதிபதியான நேபுசராதான் எருசலேமுக்கு வந்தான்; அது நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது. அவன் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியால் சுட்டெரித்துப் போட்டான்.” *எரேமியா 52:12,13.* எருசலேமுக்கு இந்த அழிவு நேரிடுவதற்கு ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே இதைக் குறித்து தேவன் முன் அறிவித்திருந்ததை இஸ்ரவேலர்கள் நினைவுகூரும்படியாக அவர் மோசேயைக் கொண்டு ஒரு பாடலை அவர்களுக்கு கற்பித்திருந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் நமது பரலோக பிதாவைப் பற்றி இதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். “கர்த்தர் அதைக் கண்டு, **தமது குமாரரும் தமது குமாரத்திகளும்** தம்மைக் கோபப்படுத்தினதினிமித்தம் மனமடிவாகி, அவர்களைப் புறக்கணித்து: என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று பார்ப்பேன்; அவர்கள் மகா மாறுபாடுள்ள சந்ததி; உண்மையில்லாத பிள்ளைகள்.” *உபாகமம் 32:19,20.*

யூதேயாவில் இருந்த மக்களைக் குறித்து தேவனிடத்தில் ஒரு திட்டம் இருந்தது; அசீரியர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட பத்துக்கோத்திரத்தாரைக் குறித்து இது போன்ற திட்டம் எதுவும் அவருக்கு இல்லாதிருந்தது. இஸ்ரவேலை மறுபடியும் அதனுடைய தேசத்துக்கு திரும்ப கொண்டுவரக்கூடிய எந்த வாக்குத்தத்தமும் கொடுக்கப்படவில்லை. *ஆமோஸ் 9:8.* புறஜாதி மக்களுக்கு இருந்த நம்பிக்கை தான்





அவர்களுக்கும் இருந்தது. *ஓசியா 3:4,5.* தேவன் தாவீதுக்கு கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. “உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலை பெற்றிருக்கும்.” *2 சாமுவேல் 7:16.* யூதேயாவில் இருந்து சிறைப்பிடித்து கொண்டுவரப்பட்டவர்களில் ஒருவனாயிருந்த தானியேல், நேபுகாத்நேச்சா ருடைய கனவுக்கு அர்த்தம் சொன்ன வேளையில் அவன் தீர்க்கதரிசனமாகச் சொன்னது, “அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றைன்றைக்கும் நிற்கும்.” *தானியேல் 2:44.* கனவுக்கு அர்த்தமாக தானியேல் சொன்னதின்படியே நான்காம் ராஜ்யத்தின் ஆளுகையின் போது இது நடக்கும். *தானியேல் 7:17.* முதலாவது ராஜ்யம் பாபிலோன், அடுத்தது பெர்சியா, அதைத் தொடர்ந்து மாவீரன் அலெக்சாண்டர் ஆளுகை செய்தான். *தானியேல் 8:17-22.* நான்காவது ராஜ்யம் ரோமருடையது, தேவன் இயேசு கிறிஸ்துவை அனுப்புவதாக தாவீதுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை இந்தக் காலத்தில்தான் நிறைவேற்றுவார். *தானி. 7:13,14; லூக்கா 1:30-33; அப்போஸ்தலர் 2:36.*

யூதேயா தேசத்தைச் சேர்ந்த மக்கள் நாடுகடத்தப்பட்ட நிலைமையில் வாழ்ந்துவந்தபோது, எசேக்கியேல் தேவனுடைய தீர்க்கதரிசியாயிருந்தான். கி.மு.605இல் நேபுகாத்நேச்சார் யூதர்களில் ஒரு பகுதியினரை பாபிலோனுக்கு சிறைப்பிடித்துக் கொண்டு சென்ற போது இவன் யூதேயா தேசத்தில் இளைஞனாயிருந்தான். கி.மு. 597இல் இரண்டாவது முறையாக யூதர்களை சிறைப்பிடித்து சென்ற போது அவன் ராஜா யோயாக்கீனையும் சிறைப்பிடித்து சென்றான். பார்க்கவும் *2 இராஜாக்கள் 24:14,15.* சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் ஒருவனாக எசேக்கியேல் இருந்தான். பரிதாபகரமாக அங்கு வாழ்ந்து வந்த யூதர்களுக்கு பதினொரு வருடங்களாக சிதேக்கியா ராஜாவாயிருந்தான்.

அப்படியிருப்பினும், கடைசியில் அவர்கள் நேபுகாத்நேச்சாருக்கு எதிராக கலகம் செய்துவிட்டார்கள். யூதேயாவில் இருந்த மக்களை சிறைப்பிடித்துப் போவதற்கும், எருசலேமை அழிப்பதற்கும் தேவன் அதிகாரம் கொடுத்திருந்த போதிலும்கூட, அவர் அவர்களுக்கு ராஜாவாகத் தான் அப்போதும் இருந்தார். ஆகையினால், எசேக்கியேல் சிறைப்பிடிக்கப்பட்ட வனாக ஐந்து ஆண்டுகள் இருந்துவிட்ட பிற்பாடு, தேவன் அவனை எருசலேமில் மீதியாயிருந்தவர்களுக்கு தொடர்ச்சியாக தீர்க்கதரிசனம் உரைக்கச் செய்தார்.

*“பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: மனுபுத்திரனே, இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: முடிவு வருகிறது, தேசத்தின் நாலு முனைகளின் மேலும்* **முடிவு வருகிறது.** *இப்பொழுதே உன்மேல் முடிவு வருகிறது; நான் என் கோபத்தை உன்மேல் வருவித்து, உன் வழிகளுக்குத்தக்கதாக உன்னை நியாயந்தீர்த்து, உன் எல்லா அருவருப்புகளின் பலனையும் உன் மேல் வரப்பண்ணுவேன். என் கண் உன்னைத் தப்பவிடாது; நான் இரங்காமல் உன் வழிகளுக்குத்தக்கதை உன்மேல் வரப்பண்ணுவேன்; உன் அருவருப்புகளுக்குத்தக்கது உன் நடுவில் வந்திருக்கும்; அப்பொழுது* **நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்.”** *எசேக்கியேல் 7:1-4.*

*“மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்லுகிறார்; தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்கவேண்டும்.” எசேக்கியேல் 34:2.*





*“கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன்.” “அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும் பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவைகளைக் கொண்டு வந்து, அவைகளை மேய்ப்பேன்.” எசே. 34:11,13.*

யூதேயாவிலிருந்து சிறைப்பிடித்து கொண்டு போகப்பட்டவர்களை மறுபடியும் தேவன் எழுபது ஆண்டுகள் கழித்து எருசலேமுக்கு கொண்டுவந்தார். *எரேமியா 25:11-13; எசேக்கியேல் 11:17,18.* யூதேயாவில் உருவாகியிருந்த கெட்ட கலாச்சாரத்திலிருந்து ஜனங்கள் வெளிவரமுடியாத அளவிற்கு சாத்தானானவன் அவர்களை “வாழ்க்கைப் பெட்டிக்குள்” அடைத்து வைத்திருந்தான். இந்தப் பெட்டிக்கு உட்படாத பிள்ளைகள், யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட நிலைமையில் இருக்கும்போது பிறந்தார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகள் உருவாவதற்கு 70 ஆண்டுகள் ஆகும் என்பதை தேவன் அறிந்திருந்தார். *தானியேல் 9:1,2.*

*“எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்: பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.” எஸ்றா 1:1,2.*

தேவன் “எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி” ஆகாய் தீர்க்கதரிசியையும், சகரியா தீர்க்கதரிசியையும் பயன்படுத்திக்கொண்டார். *எஸ்றா 5:1,2.* யாக்கோபின் சந்ததியாரில் மீதியாயிருந்தவர்களை யூதேயாவிலிருந்து எருசலேமுக்கு தேவன் மறுபடியும் கொண்டுவந்தார். லேவிய ஆசாரியத்துவ முறைமையின் கீழாக அவர்கள் தம்மிடம் நெருங்கி, தம்மை தொழுதுகொள்வதற்காக வேறொரு ஆலயத்தை கட்டும்படிக்கு

அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். விக்கிரகங்களை வழிபடும் மனநிலையை ஜனங்கள் புறக்கணித்திருந்தார்கள். ஆயினும், அவர்களுடைய அநேக ஒழுக்கங்கெட்ட நடவடிக்கைகளைக் குறித்து குற்றஞ்சாட்டும்படி தேவன் மல்கியாவை அனுப்பினார்.

*"உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்து கிறீர்கள்; ஆனாலும் எதினாலே அவரை வருத்தப்படுத்து கிறோம் என்கிறீர்கள்;* **பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும்,** *அப்படிப்பட்டவர்கள் பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும், நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும், நீங்கள் சொல்லுகிறதினாலேயே." மல்கியா 2:17.*

*"நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை. நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப்போனீர்கள்; என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:6,7.*

தேவன் "கர்த்தாதி கர்த்தாவாகவும், ராஜாதி ராஜாவாகவும்" இருக்கின்றார். அவர் சர்வவல்லமையுள்ள தேவன், அவர் தீர்க்கதரிசி களைப் பயன்படுத்தி தமது ராஜ்ய உரிமையை எப்படி நிலைநிறுத்தினார் என்பதை தெரிவிக்கும் இந்த விவரங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது அன்பையும், பொறுமையையும் நாம் காண்பது எவ்வளவு அற்புதமானது! கிறிஸ்தவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்ற அந்தஸ்துடன் இப்போது அவருடைய ராஜ்யத்தில் இருக்கின்றார்கள். "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்





கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக் கிறாரே." *எபிரெயர் 12:28,29.* தேவனுடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசம் இல்லாத மக்கள் இருப்பது நிச்சயம் என்று அவருக்கு தெரிய வருமானால், அவர்களை அழிப்பதற்கு "பட்சிக்கிற அக்கினியாக" அவர் மாறிவிடுவார் என்பதை நாம் பார்த்த இந்தப் பழைய ஏற்பாட்டு விவரங்கள் நமக்குப் புரியவைக்கின்றன. இவைகளை நாம் தனிப்பட்ட முறையில் படிக்கும்போது என்ன செய்யவேண்டுமென்றால், இந்தத் தீர்க்கதரிசிகளை நம்முடைய மனதிலிருந்து நீக்கிவிட்டு இந்தச் சூழ்நிலைகளில் தேவன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசுவதாகவே நாம் கவனிக்க வேண்டும்.

அநேக சூழ்நிலைகளில் தேவன் இஸ்ரவேல் மக்களிடம் சொன்னவைகள் எவைகளோ அவைகளையேதான் கிறிஸ்தவ மக்களிடமும் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் இயேசு கிறிஸ்து மூலமாக பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலினால் புதிய ஏற்பாட்டை எழுதின எழுத்தாளர்களைக் கொண்டு நம்மிடம் பேசுகின்றார். தேவன் மாறாதவராய் இருக்கின்றார். இன்றைக்கும் தீமை தீமையாகத் தான் இருக்கிறது. நன்மை நன்மையாகத் தான் இருக்கிறது. "ஆதாமுக்குள்" உருவானதன் மூலமாக எல்லா மக்களுமே நன்மையையும், தீமையையும் பகுத்தறியும் அறிவை பெற்றிருக்கிறார்கள்; இதன் காரணமாக நன்மையானதை தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு எல்லாருக்கும் இருக்கிறது. ஆதாமும், ஏவாளும் தேவனுடைய ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட்டது முதற்கொண்டு, இது வரையிலும் தேவனுக்கும், மனுக்குலத்துக்கும் இடையே உள்ள உறவில் எந்த ஒரு மாற்றமும் நிகழவில்லை. ஏதேன் தோட்டத்தில் மனுக்குலத்தோடு தேவனுக்கு எப்பேர்ப்பட்ட ஐக்கியம் இருந்ததோ, அப்பேர்ப்பட்ட ஐக்கியத்தை மறுபடியும் மனுக்குலத்தோடு ஏற்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; ஆனால் இது நடக்க

வேண்டுமென்றால், மக்கள் “தீமையை வெறுத்து நன்மையை” பற்றிக் கொண்டிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். *ரோமர் 12:9.*

தீர்க்கதரிசிகளின் காலம் கடந்து விட்டது. இஸ்ரவேலருக்கு அனுப்பப்பட்ட கடைசி தீர்க்கதரிசியாகிய இயேசு கிறிஸ்துவானவர் இப்பொழுது ராஜாவாகவும், பிரதான ஆசாரியராகவும், “தேவனுடைய இஸ்ரவேலாகிய” சபையின் நிமித்தமாக தமது பிதாவாகிய தேவனை சேவித்துக்கொண்டு இருக்கிறார். *கலாத்தியர் 6:16.* தமது பிதாவுக்காக இயேசு கட்டிக்கொண்டிருக்கிற சபையானது இந்த உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டிருக்கின்றது. நாமே முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையாய் இருக்கின்றோம். *எபிரெயர் 12:22-24.* எபிரெய நிருபத்தை பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் அந்த எழுத்தாளர் பயன்படுத்தின “முதற்பேறானவர்கள்” என்ற வார்த்தையின் தனிச்சிறப்பினை புரிந்துகொண்டார்கள். பார்க்கவும் *யாத்திராகமம் 4:22;13:11-13; எண்ணாகமம் 3:11-13,40,41.*

சபையானது வளர்ச்சியடைந்து ஒரு குறிப்பிட்ட பக்குவத்தை அடையும் வரையிலும், புதிய ஏற்பாடு ஆயத்தமாகிக்கொண்டிருந்த காலத்தில் சபை அங்கத்தினர்களிடம் பேசும்படி தேவன் தீர்க்கதரிசிகளை பயன்படுத்தினார். *1 கொரி 14:1-5; எபேசியர் 4:10-16.* சபையை வழிநடத்தக்கூடிய பொறுப்பினை அப்போஸ்தலர்கள் பெற்றிருந்தார்கள், ஒரு காலத்திற்கு பிறகு அந்தப் பொறுப்பு மூப்பர்களுக்கு வழங்கப்பட்டது. *அப்போஸ்தலர் 4:36,37;11:30;14:23;15:22; பிலிப்பியர் 1:1.*

நமது அடுத்த பாடமானது லேவிய ஆசாரியத்துவ முறைமையையும், இஸ்ரவேல் தேசத்தையும், ராஜாக்களையும், தீர்க்கதரிசியையும், தேவன் பயன்படுத்தியதைப் பற்றிய ஒரு சுருக்கமான விவரிப்பாக இருக்கப் போகின்றது. எகிப்தில் அடிமைகளாயிருந்த யாக்கோபின் புத்திரரை





விடுதலை செய்து அழைத்து வருவதற்கு தேவன் மோசேயை அனுப்பிய காலம் முதல், அவர் தமது உடன்படிக்கைகளில் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த எல்லாவற்றையும் நிறைவேற்றும்படி மேசியா வந்த காலம் வரையிலும் தமது ராஜ்யத்தை இந்தப் பூமியில் நிலைநிறுத்தும்படி இவைகளை கருவிகளாக பயன்படுத்திக்கொண்டார். நமது அடுத்த பாடத்தின் நோக்கமானது, தேவன் ஆபிரகாமுடைய சந்ததியாகிய ஈசாக்கும், யாக்கோபும் எப்பேர்ப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்பினாரோ, அந்த வாழ்க்கைத் தரத்தைப் பற்றி அறிந்துகொள்ளச் செய்வதாகவே இருக்கின்றது. இயேசு யூதர்களுக்குச் செய்த போதனைக்கும், அப்போஸ்தலர்கள் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து சபைக்குப் பண்ணின பிரசங்கத்திற்கும் இடையில் உள்ள தொடர்பினை அடுத்த பாடத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். தேவன் எதிர்பார்க்கின்ற தரமான வாழ்க்கை எந்த மக்களுக்குள் இருக்கின்றதோ, அங்கே அவருடைய சித்தம் செய்யப்படுகின்றது; ஆகையால், பழைய ஏற்பாட்டுப் பகுதியில் இது போன்ற வாழ்க்கை வாழ்ந்த மக்களுக்குள் தான் அவருடைய ராஜ்யத்தை நாம் பார்க்க முடியும்.